# தேசிய வகைச் சீன மற்றும் தமிழ்ப்பள்ளிகளின் மலாய்மொழிப் பாடத்தில் ஜாவி எழுத்துத் தொடர்பாக வழக்கமாகக் கேட்கப்படும் கேள்விகள்

1. APAKAH YANG BERLAKU?
   என்ன நடந்தது?

   KSSR (Semakan 2017) bagi subjek Bahasa Melayu Tahun 4 telah memperkenalkan tulisan jawi sebagai pengisian tambahan dalam aspek seni bahasa.

   சீரமைக்கப்பட்ட கே.எஸ்.எஸ்.ஆர். (2017) கலைத்திட்டத்தில் 4ஆம் ஆண்டுக்கான மலாய்மொழிப் பாடத்தில் ஜாவி எழுத்து மொழியணிப் பகுதியில் கூடுதல் கூறாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2. APAKAH TUJUAN PENGENALAN TULISAN JAWI INI DILAKUKAN?
   ஜாவி எழுத்து அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கம் என்ன?

   Ia dilaksanakan sebagai pengisian tambahan dalam aspek seni bahasa dan untuk memperkaya murid dengan pengetahuan mengenai seni, warisan dan sejarah bahasa Melayu.

   மலாய்மொழியின் கலை, பாரம்பரியம், வரலாறு பற்றிய அறிவை மாணவர்களிடையே வளப்படுத்தும் வகையில் இது மொழியணிப் பகுதியில் கூடுதல் கூறாக அமல்படுத்தப்படுகிறது.

3. BAGAIMANA PENGISIAN INI DILAKUKAN?
   இது எவ்வாறு நடத்தப்படுகிறது?

   Pengisian ini dilaksanakan melalui pembelajaran di dalam buku teks Bahasa Melayu. Terdapat 3 muka surat aktiviti seni bahasa berkaitan tulisan jawi dimuatkan di dalam buku teks setebal 164 muka surat.

   இது மலாய்மொழிப் பாடநூலில் இணைக்கப்பட்டுக் கற்பிக்கப்படுகிறது. 164 பக்கங்களைக் கொண்ட பாடநூலில் ஜாவி எழுத்துத் தொடர்பான நடவடிக்கைகள் 3 பக்கங்களில் இடம்பெற்றுள்ளன.

4. ADAKAH MURID AKAN MENGUASAI TULISAN JAWI MELALUI 3 MUKA SURAT INI?
   இந்த 3 பக்கங்களின்வழி மாணவர்கள் ஜாவி எழுத்தை முழுமையாகக் கற்றுக்கொள்ள முடியுமா?

   Seperti dijelaskan tadi, ia dilaksanakan untuk memperkenalkan tulisan jawi bagi meningkatkan pengetahuan murid mengenai aspek seni, warisan dan sejarah bahasa Melayu. Sehubungan itu, ia bukan satu pembelajaran komprehensif untuk menguasai Jawi.

   மேலே விளக்கியது போல, மாணவர்களிடையே மலாய்மொழியின் கலை, பாரம்பரியம், வரலாறு பற்றிய அறிவை மேம்படுத்துவதற்காகவே ஜாவி எழுத்து அறிமுகப்படுத்தப்படுகிறது. இது ஜாவியை முழுமையாகக் கற்றுக்கொள்வதற்கான கற்றல் ஆகாது.

5. MENGAPA TULISAN JAWI DAN TIDAK MEMBERI FOKUS KEPADA “CODING” DAN CABANG ILMU LAIN?
ஏன் ஜாவி எழுத்து? ஏன் மறையெண்ணுக்கும் (கோடிங்) மற்றத் துறைசார்ந்த அறிவுக்கும் முக்கியத்துவம் இல்லை?

Tulisan jawi merupakan pengisian tambahan yang releven untuk mata pelajaran Bahasa Melayu.
KPM memperkenalkan coding atau pengekodan kepada murid sekolah rendah dan menengah dalam pelaksanaan Kurikulum Standard Sekolah Rendah (KSSR) (Semakan 2017) dan Kurikulum Standard Sekolah Menengah (KSSM). Di sekolah rendah ia melibatkan murid Tahap 2 (Tahun 4, 5 dan 6). Manakala untuk sekolah menengah melibatkan Tingkatan 1 hingga 3. Aspek coding ini dipelajari melalui mata pelajaran Reka Bentuk dan Teknologi serta Asas Sains Komputer.

ஜாவி எழுத்து மலாய்மொழிப் பாடத்திற்கேற்ற கூடுதல் கூறாக அமைந்துள்ளது. மலேசியக் கல்வி அமைச்சு சீரமைக்கப்பட்ட கே.எஸ்.எஸ்.ஆர். (2017) மற்றும் கே.எஸ்.எஸ்.எம். கலைத்திட்டங்கள் வாயிலாக தொடக்கப்பள்ளி, இடைநிலைப்பள்ளி மாணவர்களுக்கு மறையெண்ணை அறிமுகப்படுத்தியுள்ளது. இது தொடக்கப்பள்ளியில் இரண்டாம் படிநிலை மாணவர்களையும் (ஆண்டு 4-6) இடைநிலைப்பள்ளியில் படிவம் 1-3 வரையிலான மாணவர்களையும் உட்படுத்துகிறது. இந்த மறையெண், வடிவமைப்பும் தொழில்நுட்பமும் மற்றும் அடிப்படைக் கணினி அறிவியல் ஆகிய பாடங்களின்வழி கற்பிக்கப்படுகிறது.

6. BILAKAH KEPUTUSAN INI DIBUAT?
இந்த முடிவு எப்போது எடுக்கப்பட்டது?

Perancangan pengenalan tulisan jawi ini telah dilaksanakan melalui semakan semula Kurikulum Standard Sekolah Rendah (KSSR) sejak tahun 2014.

2014ஆம் ஆண்டு முதல் கே.எஸ்.எஸ்.ஆர். கலைத்திட்டம் மறுசீரமைப்புச் செய்யும் போது, ஜாவி எழுத்தை அறிமுகப்படுத்தும் முடிவு எடுக்கப்பட்டது.

7. ADAKAH UNTUK TAHUN 4 SAHAJA?
இது 4ஆம் ஆண்டுக்கு மட்டுமா?

Pengenalan tulisan jawi ini adalah untuk Tahap 2 dengan melibatkan tahun 4 pada tahun 2020, tahun 5 pada tahun 2021 dan tahun 6 pada tahun 2022. Murid Tahap 1 (Tahun 1 hingga 3) tidak terlibat dengan pengenalan tulisan jawi.

2020இல் ஆண்டு 4, 2021இல் ஆண்டு 5, 2022இல் ஆண்டு 6 என இரண்டாம் படிநிலையில் (ஆண்டு 4-6) மட்டுமே ஜாவி எழுத்து அறிமுகப்படுத்தப்படுகிறது. முதலாம் படிநிலை (ஆண்டு 1-3) மாணவர்கள் இதில் உட்படுத்தப்படவில்லை.

8. ADAKAH TULISAN JAWI INI AKAN DIUJI DALAM UJIAN DAN PEPERIKSAAN?
ஜாவி எழுத்து, தேர்வில் மதிப்பீடு செய்யப்படுமா?

Tidak. Tiada pentaksiran akan dijalankan bagi tulisan jawi.

இல்லை. ஜாவி எழுத்து எந்த வகையிலும் மதிப்பீடு செய்யப்படாது.

9. KENAPA MEMAKSA MURID BUKAN MELAYU MEMPELAJARI TULISAN JAWI?
மலாய்க்காரர் அல்லாத மாணவர்களை ஜாவி எழுத்தைக் கற்பதற்குக் கட்டாயப்படுத்துவது ஏன்?

Ia bukan paksaan sebaliknya satu usaha untuk meningkatkan kefahaman semua murid mengenai seni, warisan dan sejarah bahasa Melayu yang dijalankan sebagai satu aktiviti PdP dalam aspek seni bahasa.

இது வற்புறுத்துதல் அல்ல. மாறாக, அனைத்து மாணவர்களிடையேயும் மலாய்மொழியின் கலை, பாரம்பரியம், வரலாறு பற்றிய புரிதலை மேம்படுத்தும் முயற்சியாக மொழியணிக் கூறில் நடத்தப்படும் ஒரு கற்றல்கற்பித்தல் நடவடிக்கையாகும்.

10. ADAKAH INI BERLAKU DI SJK SAHAJA?
இது தேசிய வகைப்பள்ளிகளுக்கு மட்டுமா?

Tidak. Pengenalan ini melibatkan semua Sekolah Kebangsaan (SK) dan Sekolah Jenis Kebangsaan (SJK).

இல்லை. இது அனைத்துத் தேசியப்பள்ளிகளையும் தேசிய வகைப்பள்ளிகளையும் உட்படுத்துகிறது.